# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

**அசல் வழக்கு எண். 62/2022**

**பெயர்: முருகன்** **நாள்: 10.10.2025**

வா.சா.1 - பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

வா.சா.1- முருகன் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி : 12:40

என்னுடைய வழக்குரையில் தாக்கல் செய்துள்ள 4-வது ஆவணம் எவ்வாறு எனக்கு கிடைக்கப்பெற்றது என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் நான் வழக்குரையில் தாக்கல் செய்துள்ள 4-வது ஆவணத்தில் உள்ள சங்கதிகள் பற்றி எனக்கு தெரியுமா என்றால், படித்துப் பார்த்தேன் தெரிந்து கொண்டேன். என்னிடம் காட்டப்படும் அறிவிப்புதான் வழக்குரையுடன் தாக்கல் செய்த 4-வது ஆவணத்தின் அலுவலக நகல் என்றால், சரிதான். மேற்கூறிய 4- வது ஆவணத்தின் அலுவலக நகல் **பி.வா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பி.வா.ஆ.1 ஆவணத்தின் 1 மற்றும் 2 பத்திகளில் தாவா சர்வே எண் 573/1 ஐ பொறுத்து பிரதிவாதிகளின் தாயார் பழனியம்மாள் பெயரில் ஏற்பட்ட சங்ககிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேலம். அ.வ.எண் 424/1973 ல் 28.01.1975 தேதியில் பிறப்பிக்கப்பட்ட முதல் நிலை தீர்ப்பாணை மற்றும் சங்ககிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தற்போது நிலுவையில் உள்ள இ.ம. எண். 759/2018 மனு ஆகியவற்றைப் பற்றி குறிப்பிட்டிருந்தார்கள் என்றால், சரிதான். இடங்கணசாலை கிராமத்தில் வசிக்கும் சித்தம் மகன் மாரிமுத்து என்பவர் என்னுடைய தாய்மாமன் என்றால், சரிதான். நானும் அவரும் இன்றைய தேதி வரை சுமூகமான உறவில் உள்ளோமா என்றால், கடந்த ஒரு வருட காலமாக சுமூகமான உறவில் உள்ளோம் ஆனால் அதற்கு முன்பு சுமார் 4 ஆண்டுகளாக பேச்சு வார்த்தை இல்லை, அதற்கு முன்பு சுமூகமான உறவில்தான் இருந்தோம். பி.வா.சா.1 அறிவிப்பில் என்னுடைய தாய்மாமா மாரிமுத்து சர்வே எண் 573/1 ல் பிரதிவாதிகளின் சுவாதீன அனுபவத்தை இடையூறு செய்வதாக குறிப்பிட்டு பிரதிவாதிகள் அவருக்கு எதிராக சங்ககிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிரந்தர

உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அ.வ.எண்.202/2009 என்ற வழக்கினை தாக்கல் செய்து அதில் கடந்த 08.01.2014 ம் தேதியில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டிருந்தனர் என்றால், அதில் அவ்வாறுதான் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே பி.வா.சா.1 பற்றி எனக்கு தெரிந்துள்ள நிலையில் அதில் குறிப்பிட்டுள்ளவாறு தாவா சொத்தினைப் பொறுத்து என் தாயாருக்கு ஆதரவாக முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ள விவரமும் அதன் அடிப்படையில் பிரதிவாதிகள் தாவா சொத்தினை அனுபவித்து வரும் விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் அதனை மறைத்து நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. பிரதிவாதிகள் இந்த வழக்கில் என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், எனக்கு தெரியாது. பி.வா.சா.1 ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதிவாதிகளின் தாயாருக்கு ஆதரவாக அ.வ.எண்.424/1973 வழக்கில் தாவா சர்வே எண் 573/1 ஐ பொறுத்து முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதா என்று எனக்கு கிரயம் செய்த நபரிடமாவது கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால், இல்லை. இந்த வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் இ.ம.எண்.2/2022 ல் மேற்படி முதல் நிலை தீர்ப்பாணை மற்றும் இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள இ.ம.எண்.759/2018 மனு மற்றும் அதன் மீதான உத்தரவு ஆகியவற்றின் சான்றிட்ட நகல்களை பற்றி தெரிந்து கொண்டேனா என்றால், இல்லை. எனக்கு பிரதிவாதிகள் தரப்பு எதிர் வழக்குரைப் பற்றியும் அவர்கள் தாக்கல்செய்த ஆவணங்களைப் பற்றி நன்கு தெரிந்தும் அவற்றைக் குறித்த குறுக்கு விசாரணையை தவிர்க்க வேண்டி மேற்படி சங்கதிகளைப் பற்றி எனக்கு தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள சாட்சியத்தில் அதில் உள்ள விவரங்களை யார் கூறினார்கள் என்றால், என்னுடைய வழக்கறிஞர் அதில் உள்ள விவரங்கள் பற்றி எனக்கு தெரியும். முதல் விசாரணையில் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை சங்கதிகள் பொய்யானவை என்று அதில் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். முதல் விசாரணையில் பிரதிவாதிகளின் தாயார் பெயரிலான அ.வ.எண். 424/1973 தீர்ப்பாணையோ தற்போது நிலுவையில் உள்ள இ.ம.எண்.759/2018 மனு என்னை கட்டுப்படுத்தாது என்று குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். நான் தாவா தாக்கல்

செய்த தேதியில் என் பெயரில் தாவா சொத்திற்கு பட்டா வழங்கப்படவில்லை என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள **வா.சா.ஆ.4** கூட்டுப்பட்டாவில் 05.08.2023 தேதியில்தான் என் பெயர் கூட்டாக சேர்க்கப்பட்டதாக உள்ளது என்றால், சரிதான். தாவா சொத்திற்கான பட்டாவில் என் பெயரில் சேர்ப்பதற்காக கொடுத்த விண்ணப்பத்தையோ என் பெயரை சேர்க்க பிறப்பிக்கப்பட்ட பட்டா மாறுதல் உத்தரவையோ இவ்வழக்கில் சான்றாவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். அரசு வழக்கறிஞரின் கருத்துரை பெற்றப் பிறகுதான் என் பெயர் தாவா சொத்திற்கான பட்டாவில் சேர்க்கப்பட்டது என்று சாட்சி சுயமாக சொல்கிறார். தாவா சொத்திற்கான பட்டாவில் என் பெயரை சேர்ப்பதற்கான விண்ணப்பம் இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகுதான் கொடுத்தேன் என்றால், சரிதான். அந்த விண்ணப்பத்தின் பேரில் என்னையோ பிரதிவாதிகளையோ சங்ககிரி வட்டாட்சியர் விசாரணை செய்யவில்லை என்றால், சரிதான். இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோதே பிரதிவாதிகளுக்கு தெரியாமல் சட்டவிரோதமாக எனது பெயரை தாவா சொத்திற்கான பட்டாவில் கூட்டாக சேர்த்துள்ளேன் என்றால், சரியல்ல. அதனால் வா.சா.ஆ.4 ஆவணம் இவ்வழக்கு தாக்கல் செய்த பின்பு சட்டவிரோதமாக ஏற்படுத்தப்பட்டது என்பதால் அதன் அடிப்படையில் பரிகாரம் கோர இயலாது என்றால், சரியல்ல. தாவா சர்வே எண் 573/1 ல் பாகப்பிரிவினை எதுவும் தரப்பினர்களுக்கு இடையில் நடைபெறவில்லை என்று தீர்மானித்து அ.வ.எண்.424/1973 வழக்கில் முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் பாகம் பிரியாத சர்வே எண் 573/1 ல் சக்கு பந்தி மற்றும் விஸ்திரணம் குறிப்பிட்டு நான் ஏற்படுத்தியுள்ள **வா.சா.ஆ.2** கிரய பத்திரம் சட்டப்படி செல்லாது என்றும் பிரதிவாதிகளைக் கட்டுப்படுத்தாது என்றால், சரியல்ல. எனக்கு கிரயம் செய்ததாக சொல்லும் சின்னதம்பி வாரிசுகள் மேற்படி அ.வ.எண்.424/1973 வழக்கில் 7 முதல் 11 பிரதிவாதிகளாக சேர்த்தப்பட்டு அவர்களுக்கு எதிராக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி தீர்ப்பாணை அவர்களையோ அவர்களிடம் இருந்து கிரயம் பெற்ற என்னையும் சட்டப்படி கட்டுப்படுத்தும் என்றால், சரியல்ல. பி.வா.சா.1 அறிவிப்பில் இந்த நீதிமன்றத்தில் துணை முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இ.ம.எண்.759/2018 மனு பற்றி குறிப்பிட்டுள்ள நிலையில் வழக்கிடை கிரயதாரரான நான் அந்த மனுவில்

தரப்பினராக சேர்ந்து பரிகாரம் கோரியிருக்கவேண்டுமே தவிர பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம்கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. பிரதிவாதிகளும் தாவா சர்வே எண் 573/1 ல்தான் குடியிருந்து வருகிறார்கள் என்றால், அதுப்பற்றி எனக்கு தெரியாது. அவர்கள் அந்த சர்வே எண்ணில்தான் குடியிருந்து வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரிந்து வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. என்னுடைய மாமா மாரிமுத்து இடங்கணசாலை பஞ்சாயத்து துணை தலைவராக இருந்தார் என்றால், சரிதான். அவருக்கு எதிராக பிரதிவாதிகள் நிரந்தர உறுத்துக்கட்டளை தீர்ப்பாணை பெற்றதால் எப்படியாவது பிரதிவாதிகளின் சொத்தினை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் என் பெயரில் ஒரு மோசடியான கிரய பத்திரம் ஏற்படுத்தி இவ்வழக்கை அவர்தான் முன்னின்று நடத்தி வருகிறார் என்றால், சரியல்ல. வா.சா.1 பத்திரத்தின் நகலை மாரிமுத்து வாங்கி எனக்கு கொடுத்துள்ளார் என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 1:30

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2025.10.10 17:15:38 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.